**ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI**

# மாநிலச் செய்திகள்

**நேரம்: 01.45 pm**

**06.10.2023**

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - ஐக்கிய அரபு அமீரக நாடுகளுக்கு இடையேயான நட்புறவும் ஒத்துழைப்பும் தொடர்ந்து வலுப்பெறும் என்று மத்திய வர்த்தக தொழிற்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

2. ரிசர்வ் வங்கி, பிற வங்கிகளுக்கு வழங்கும், குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதம் 6.5 சதவீதமாக தொடரும் என்று ஆளுநர் திரு. சக்திகாந்ததாஸ் தெரிவித்திருக்கிறார்.

3. தமிழ்நாட்டில் ஆயிரத்து 200 இளைஞர்களுக்கு நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் காலதாமத சொத்துவரிக்கான ஒரு சதவிகித அபராத தொகை அறிவிப்பை திரும்பப்பெற அஇஅதிமுக பொதுசெயலர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தினார்.

4. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இதுவரை இந்தியா 21 தங்கம் உட்பட 88 பதக்கங்களுடன் தொடர்ந்து 4-வது இடத்தில் உள்ளது.

இனி விரிவான செய்திகள்

ΩΩΩΩΩΩΩ

பியூஷ்கோயல்

இந்தியா - ஐக்கிய அரபு அமீரக நாடுகளுக்கு இடையே அதிகரிக்கும் நட்புறவும், ஒத்துழைப்பும் வர்த்தகத்தில் பெரும் வாய்ப்புகளை உருவாக்கும் என்று மத்திய வர்த்தக தொழிற்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

அபுதாபியில் தொழில்முனைவோர் மற்றும் வர்த்தகர்களிடையே உரையாற்றிய அவர், ஏறுமுகமான பொருளாதார வளர்ச்சி, வளர்ந்து வரும் நட்புறவு போன்றவை, இரு நாடுகளுக்கு இடையே வணிகத்தை முன்னெடுத்துச் செல்லும் என்றும் கூறியுள்ளார்.

உணவு பாதுகாப்பு, கல்வி, எரிசக்தி, விண்வெளி தொழில் நுட்பங்களுக்கான காலநிலைமாற்ற சவால்களை எதிர்கொள்ளுதல் போன்ற பிரிவுகளில் ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஆர்வமிகு இளையோர்களின் திறன்களால், ஐக்கிய அரபு அமீரகத்தில் அவர்களுக்கான சிறந்த வர்த்தக சந்தை வாய்ப்புகளை அவர் எடுத்துரைத்தார்.

21-வது நூற்றாண்டின் சிறந்த நட்புறவு நாடுகளாக இந்தியாவும், ஐக்கிய அரபு அமீரகமும் திகழ்கிறது என்று திரு. பியூஷ்கோயல் தெரிவித்தார்.

ΩΩΩΩΩΩΩ

சாகர் பரிக்ரமா

சாகர் பரிக்ரமா பயணத்தின் 9-வது கட்ட ஆய்வுப் பணிகளை மத்திய அமைச்சர்கள் திரு. பர்ஷோத்தம் ரூபலா, டாக்டர் எல்.முருகன் ஆகியோர் தமிழ்நாட்டில் நாளை முதல் 3 நாட்களுக்கு மேற்கொள்கின்றனர்

இதன்படி முதல்கட்டமாக ராமநாதபுரம் மாவட்டத்தின் மீன்பிடி துறைமுகங்கள், மீன்பிடி தளங்களை நாளை பார்வையிடும் அமைச்சர்கள், தொடர்ந்து புதுக்கோட்டை, தஞ்சை, நாகை மாவட்ட மீன்பிடி தளங்களை ஆய்வு செய்கின்றனர்.

பூம்புகார், கடலூர் துறைமுகங்களிலும், தரங்கம்பாடி மீன்பிடி தளத்திலும் மீனவர்களுடன் அமைச்சர்கள் கலந்துரையாடுகிறார்கள்

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் செயல்படுத்தப்படும் மீன்வளத்திட்டங்களையும் அவர்கள் கேட்டறியவுள்ளனர்.

நாளைமறுநாள் விழுப்புரம் மாவட்டம் புதுப்பட்டினம் மீனவர் கிராமங்களை சேர்ந்த மீனவர்களுடன் கலந்துரையாடும் அமைச்சர்கள், தொடர்ந்து கல்பாக்கத்திலும் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

மகாபலிபுரத்தில் இறால்குஞ்சு பொறிப்பகத்தை பார்வையிடும் அமைச்சர்கள், சென்னை தலைமைச்செயலகத்தில் மாநில மீன்வள உயரதிகாரிகள் உடனான ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

பின்னர் திருவெற்றியூர், சென்னை மீன்பிடி துறைமுகங்களையும் அமைச்சர்கள் பார்வையிடுகின்றனர்.

ΩΩΩΩΩΩΩ

ரிசர்வ் வங்கி

ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும், குறைந்தகால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதம் 6.5 சதவீதமாக தொடரும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சக்திகாந்ததாஸ் தெரிவித்திருக்கிறார்.

மும்பையில் இன்று அவர் வெளியிட்ட வங்கியின் நிதிக்கொள்கை அறிக்கையில், நாட்டில் நிலவும் சாதகமான பொருளாதாரம் மற்றும் நிதி சார்ந்த வளர்ச்சிகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில் இந்நடவடிக்கை என்றார்.

கடந்த ஜுலை, ஆகஸ்ட் மாதங்களை விட செப்டம்பர் மாதத்தில் பணவீக்க விகிதத்தின் நிலைமை ஆக்கப்பூர்வமாக உள்ளதாக கூறியஅவர், இருப்பினும் பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், உலகளாவிய உணவு சங்கிலி, எரிபொருள் விலை சூழலால் பணவீக்க விகிதத்தில் ஏற்ற இறக்கங்கள் இருக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ரிசர்வ் வங்கி அறிக்கையில், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதம் நடப்பு நிதியாண்டின் 2-வது காலாண்டில் 6.5 சதவிகிதமாகவும்,

3-வது காலாண்டில் 6 சதவிகிதமாகவும், 4-வது காலாண்டில் 5.7 சதவிகிதமாகவும் காட்டப்பட்டுள்ள நிலையில், அடுத்த நிதியாண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 6.6 சதவிகிதமாக இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

பணவீக்க விகித இலக்கை எட்டும் வகையில் பல்வேறு முனைப்பு நிதிக்கொள்கைகளை ரிசர்வ் வங்கியின் நிதிக்குழு ஆராய்ந்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக திரு. சக்தி காந்ததாஸ் கூறினார்.

ΩΩΩΩΩΩΩ

பிரதமர்

மும்பை கொரிஹான் பகுதியில் 5 அடுக்கு மாடி குடியிருப்பில் இன்று அதிகாலை நேரிட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். 31 பேர் காயமடைந்தனர்.

தரைப்பகுதியிலிருந்து பரவிய இந்த தீயால் அடுக்குமாடி கட்டிடத்தில் மேல் பகுதிகளில் சிக்கிய மக்களை மீட்கும் நடவடிக்கைகளின் போது 30 பேர் காப்பாற்றப்பட்டனர்

இதனிடையே இந்த சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு, பிரதமரின் தேசிய பேரிடர் நிவாரணத் நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் பிரதமர் திரு. நரேந்திரமோடி அறிவித்துள்ளார்.

ΩΩΩΩΩΩΩ

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் அரசின் சிறப்பான நடவடிக்கைகளால் தொழில்நிறுவனங்கள் அதிகளவில் முதலீடுகளை செய்வதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் பிரான்ஸ் நாட்டின் செயின்ட் கோபைன் நிறுவன அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்ட அவர், தொழில்நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மாநிலஅரசு வழங்குவதாக குறிப்பிட்டார்.

தொடர்ந்து முதலமைச்சர் தஞ்சையில் இன்று நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று காலை திருச்சி விமான நிலையம் வந்தபோது அவருக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் சாலை மார்க்கமாக முதலமைச்சர் தஞ்சை புறப்பட்டு சென்றார்.

ΩΩΩΩΩΩΩ

உதயநிதி

தமிழ்நாட்டில் பயிற்சிபெற்ற ஆயிரத்து 200 இளைஞர்களுக்கு நான்முதல்வன் திட்டத்தின்கீழ் பணிநியமன ஆணைகள் இன்று வழங்கப்பட்டதாக மாநில இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுவரை 13 லட்சம் பேருக்கு இத்திட்டத்தின்கீழ் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பகுதிநேர ஆசிரியர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்று அவர் கூறினார்.

... வாய்ஸ் ....

இதனிடையே, இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் தங்களது வேலைநிறுத்தப் போராட்டத்தை விலக்கிக் கொண்டதாக அறிவித்துள்ளனர்.

சென்னை தலைமை செயலகத்தில் பள்ளிக்கல்வித் துறை செயலருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதையடுத்து இம்முடிவு எட்டப்பட்டுள்ளது.

ΩΩΩΩΩΩΩ

அன்பில் மகேஷ்

தமிழகத்தில் மகளிரின் முன்னேற்றத்தை அடிப்படையாக கொண்டு பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருவெறும்பூரில் 80 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 40 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடனுதவிகளை இன்று வழங்கி பேசியஅவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய காரணியாக சுயஉதவிக்குழுக்கள் திகழ்வதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ΩΩΩΩΩΩΩ

துரைமுருகன்

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12 ஆயிரத்து 525 ஊராட்சிகளில் 4 ஆயிரத்து 357 பதவி இடங்கள், ஆதிதிராவிட பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, மாநில அமைச்சர் திரு. துரைமுருகன் கூறியிருக்கிறார்

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருப்பத்தூர் மாவட்டம் நாயக்கனேரி ஊராட்சி மன்ற தலைவர் பதவி மட்டுமே நீதிமன்ற வழக்கின் காரணமாக பொறுப்பேற்க முடியாத சூழல் உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மாநிலத்தில் ஆதிதிராவிட பழங்குடின மக்களுக்கான சமூகநீதி நிலைநாட்டப்படுவதாக கூறிய அவர், அனைவரும் சமத்துவமாய் வாழ சமத்துவபுரங்களை உருவாக்கியுள்ள மாநிலம் தமிழகம் என்றும் எடுத்துரைத்தார்.

ΩΩΩΩΩΩΩ

மு.பெ. சாமிநாதன்

ஈரோடு மாவட்டம் முகாசி பிடாரியூர் ஊராட்சியில் ஒருகோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாயை மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக துவக்கிவைத்தார்.

தொடர்ந்து சென்னிமலையில் 21 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட புதிய நில வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தை திறந்து வைத்த அமைச்சர் இப்பகுதிகளுக்கு உட்பட்ட 400-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

ΩΩΩΩΩΩΩ

எடப்பாடி கே.பழனிச்சாமி

தமிழகத்தில் வீட்டுவரி, சொத்துவரியை காலதாமதமாக செலுத்துவோருக்கு ஒரு சதவிகித அபராத தொகை வசூலிக்கப்படும் என்ற அரசின் அறிவிப்பு விலக்கி கொள்ளப்பட வேண்டுமென்று அஇஅதிமுக பொதுசெயலர் திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி கூறியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஏற்கனவே விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு இந்த அபராத கட்டணம் பெரும் சுமையை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்.

ΩΩΩΩΩΩΩ

ராமதாஸ்

தமிழ்நாட்டில் குறுவை சாகுபடியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்க அரசு முன்வரவேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறுவை நெற்பயிர்களுக்கு காப்பீடு வழங்கப்படாத நிலையில் இழப்பீட்டு தொகையை அதிகரித்து வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

ΩΩΩΩΩΩΩ

நீலகிரி வாய்ஸ்

நீலகிரி மாவட்டம் பந்தலூர் பகுதியில் விவசாய நிலங்களை சேதப்படுத்தி வரும் காட்டுயானையை அப்புறப்படுத்த வனத்துறையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

.... வாய்ஸ் .....

ΩΩΩΩΩΩΩ

சீன விளையாட்டு போட்டிகள்

சீன ஹாங்சூவில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இதுவரை இந்தியா 21 தங்கம், 32 வெள்ளி, 35 வெண்கலம் என 88 பதக்கங்களுடன் தொடர்ந்து 4-வது இடத்தில் உள்ளது.

முன்னதாக இன்று நடைபெற்ற ஆடவர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா, பங்களாதேஷை தோற்கடித்து இறுதி போட்டிக்கு முன்னேறியது.

ஹாக்கி பிரிவில் தங்கப்பதக்கத்திற்கான போட்டியில் இந்திய ஆடவர் அணி – ஜப்பானுடன் இன்றுமாலை மோதுகிறது.

சிராக் ஷெட்டி, சாத்விக் இணை அரையிறுதி ஆடவர் பேட்மிட்டனில் களமிறங்கவுள்ளது.

ΩΩΩΩΩΩΩ

கிரிக்கெட்

ஹைதராபாத்தில் இன்று **ICC** உலக கோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானிற்கு எதிராக டாஸ் வென்ற நெதர்லாந்து முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்கும்

ΩΩΩΩΩΩΩ

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.